# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.38 |
| Name | : | தனலெட்சுமி |
| Husband Name | : | புண்ணியமூர்த்தி |
| Address | : | சனமங்கலம் |
| Age | : | 29/2025 |

**தேதி : 08.10.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் சனமங்கலத்தில் வசித்து வருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி வசந்தி அவரது போட்டோ ஸ்டூடியோவை மேம்படுத்துவதற்காக லோன் வாங்கி தரும்மாறு கூறியதால் ரூ.76,000/- கடன் பெற்றுக்கொடுத்தேன். அதில் ரூ.11,000/- மட்டும் எதிரி திரும்ப செலுத்தவில்லை. அதனால் நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் எங்களிடம் வந்து தவணைகளை செலுத்துமாறு கேட்டனர். எதிரியை தேடி பார்த்தபோது அவர் தலைமறைவாகிவிட்டது தெரியவந்தது. தற்போது வரை மேற்படி நான் கடன் பெற்று தந்த தொகைக்கான நான்தான் தவணை கட்டிவருகிறேன். பின்னர் இதுசம்மந்தமாக சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். குற்றப்பிரிவு போலீஸார் என்னை விசாரித்து 27.07.2024 அன்று விசாரணை செய்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வசந்தி எப்படி பழக்கம் என்றால் லோன் வாங்கி தரும்வகையில் பழக்கம். இதற்கு முன்பு 4 லோன் வாங்கிகொடுத்து வசந்தி செலுத்தியுள்ளார். நான் போலீஸார் விசாரணையில் எந்த தனியார் நிதி நிறுவனத்தின் பெயரை குறிப்பிட்டு லோன் வாங்கிகொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரியிடம் சென்று தவணைகளை செலுத்த சொல்லி கேட்டதில்லை என்றால் சரிதான். எந்த தேதியிலிருந்து எதிரி காணாமல் போய்விட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தற்போது சொன்ன விவரங்களைத்தான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சரிதான். வசந்திக்கும், எங்க வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 500மீட்டர் இருக்கும். வசந்தி எப்போது வாடகைக்கு சென்றார் என்றால் தெரியாது. எத்தனை வருடமாக வசந்தி அந்த வாடகை வீட்டில் குடியிருக்கிறார் என்றால் தெரியாது. வசந்தியிடம் ஏற்கெனவே பணம் கொடுப்பதற்கு முன்பு பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. கடன் கொடுத்த வகையில்தான் வசந்தி எனக்கு பழக்கமானார். அதற்கு பிறகுதான் கட்டவில்லை. என்னை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் வசந்திக்கு இல்லை என்றாலும், 30,. 40 பேர் ஒருசேர கடன் கேட்டதால் அவரால் கடனை செலுத்த இயலவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வசந்திக்கு என்னை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்துதான் நான் இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.